ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,860 — 1969 ජූනි 27 වැනි සිකුරාදා — 1969.6.27

14,860 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு யூன் மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் | 709 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | 724 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 715 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 715 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | 724 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | 722 | ஏல விற்பனைகள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 722 | நானுவித அறிவித்தல்கள் | — |


## பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

1. *படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. *கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. *நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச் சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. *அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரிசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆண்டு திசெம்பர் மீ 20 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

---

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சா வழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**சேவையிலுள்ளவர்களுக்கு கட்புல, செவிப்புலக் கல்வியிலும் நூல்நிலையச் சேவைகளிலும் பயிற்சி நெறி**

மேற்குறித்த இரண்டு வாரகால பயிற்சி நெறிக்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு கீழே கொடுபட்டுள்ள விதிக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் கட்புல, செவிப்புலக் கல்வி, நூல் நிலையச் சேவைகள் வித்தியாதிபதியால் 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**கட்புல, செவிப்புலக் கல்வியிலும் நூல்நிலையச் சேவைகளிலும் பயிற்சி**" எனத் தெளிவாக அடையாளமிடப்பட்டு வித்தியாதிபதி, கட்புல, செவிப்புலக் கல்வியும் நூல்நிலையச் சேவைகளும், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு 2 என்ற விலாசமிடப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.

2. இப்பயிற்சி நெறி சிங்கள மொழியிலும் தமிழ் மொழியிலும் நடாத்தப்படும்.

3. ஆசிரியர் கலாசாலை ஒன்றில் பயிற்சி நெறி ஒன்றினை பூர்த்தி செய்து ஆசிரியர்களாக நிரந்தர சேவை புரிபவர்களே இதற்கு விண்ணப்பிக்கலாம்.

4. விண்ணப்பதாரிகள் 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படலாகாது.

5. கல்வி அமைச்சில் கட்புல, செவிப்புலப் பிரிவில் நடைபெறும் இப்பயிற்சி நெறிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு கடமை சம்பந்தமான லீவும் உணவுப் படியும் வழங்கப்படும். இப்பயிற்சி நெறிக்கு சமுகமளிக்கும் பொருட்டும் அதனைப் பூர்த்திசெய்தபின் திரும்பிச் செல்தற்கும் கடமை சம்பந்தமான புகையிரத ஆணைச்சீட்டுகளுக்கு அவர்கள் உரித்துடையராவர்.

6. இப்பயிற்சி நெறியை சித்திகரமாக பூர்த்தி செய்பவர்களுக்கு தராதரப் பத்திரம் ஒன்று வழங்கப்படும்.

7. இவ்வாசிரியர்கள் நியமிக்கப்படும் பாடசாலைகளில் கற்பித்தற் துணைச்சாதனங்கள் நிலையத்தில் (பாடசாலை நூல்நிலைய, கட்புல, செவிப்புலத் தொகுதி) கடமை புரியுமாறு வேண்டப்படுவார்கள்.

8. கட்புல, செவிப்புலக் கல்வி தொகுதியில் பாடசாலை நூல் நிலையத்திலும் இவர்கள் செய்யும் வேலை நேரம் கற்பித்தல் கடமை புரிந்த நேரமாக (மணித்தியாலங்களில்) கணிக்கப்படும்.

சீ. ஜே சேரசிங்க,
பதில் நிரந்தரக் காரியதரிசியும்
மகா வித்தியாதிபதியும்.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ.

## சேவையிலுள்ளவர்க்கென கட்புல செவிப்புலக் கல்வியிலும் நூல் நிலையச் சேவையிலுமான பயிற்சி

**(விண்ணப்பப் படிவம்)**

1. முழுப் பெயர் : ———.
2. பிறந்த திகதியும் 1.7.69 அன்றுள்ளபடி வயதும் : ———.
3. பதவிப் பெயரும் ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்ட இலக்கமும்:———.
4. பால் : ———.
5. பாடசாலை விலாசம் : ———.
6. சொந்த விலாசம் : ———.
7. சொந்த இடம் : ——— .
8. விவாகம் செய்தவரா செய்யாதவரா : ———.
விவாகம் செய்தவராயின் கணவன்/மனைவி உத்தியோகம் புரிபவரா: ———.
அவருடைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் : ———.
9. உயர்தொழிற் தகைமைகள் :
(i) ஆசிரியர் கலாசாலை : ———.
(ii) பயிற்சிக் காலம் : ———.
(iii) தராதரப் பத்திரத்தின் இலக்கமும் அது காரியப்படும் திகதியும் : ———.
எடுத்த பாடங்கள் : ———.
10. வேறு தகைமைகள், இருப்பின் : ———.
11. பின்வரும் மொழிகளில் சித்தியெய்திய ஆகக்கூடிய பரீட்சை :—
சிங்களம் : ———.
தமிழ் : ———.
ஆங்கிலம் : ———.
12. நூல்நிலைய நிறுவனத்தில் பெற்றுள்ள யாதேனும் தகைமைகளும் அனுபவமும் பற்றிய விபரங்கள், இருப்பின் : ———.
13. கற்பித்தற் துணைச்சாதனங்கள்—இவற்றை தயாரிப்பதிலும் உபயோகிப்பதிலும் பெற்றுள்ள விசேட தகைமைகளும் அனுபவமும்—(பிம்ப வீழ்த்திகள், நாடாப் பதிவிலி போன்றவற்றை உபயோகிப்பதில் யாதேனும் அனுபவம் உண்டா) : ———.
14. விசேட உளச்சார்புகள் : ———.
15. விசேட ஆற்றல்கள் : ———.
16. முன்னைய உத்தியோகம் பற்றிய விபரங்கள், இருப்பின் :———
17. நூல்நிலையம் ஒன்றின் அங்கத்தவராயின் விபரங்களைக் கொடுக்கவும் : ———.
18. விசேட உரிமைகள் பற்றிய விபரங்கள், இருப்பின் : ———.
19. இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் செம்மையானவையுமென இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

———,
கையொப்பம்.

திகதி : ———.

20. அதிபரின் சிபார்சு—

சேவையிலுள்ளவர்க்கான மேற்குறித்த பயிற்சி நெறியை பின்பற்றுதற்கு திரு./திருமதி/செல்வி. ............................செய்துள்ள விண்ணப்பத்தை சிபார்சு செய்கிறேன்/செய்யவில்லை. மேற்குறித்த பயிற்சி நெறியை பின்பற்றுதற் பொருட்டு இரண்டு கிழமைகளுக்கு அவரை விடலாம்/விடமுடியாது.

———,
அதிபரின் கையொப்பம்.

திகதி : ———.

6-1058—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் பாடசாலைகளில் உதவி ஆசிரியர் பதவிகள்

சிங்கள/தமிழ்/ஆங்கில ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது ஆங்கில உதவி ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியோரிடமிருந்து உதவி ஆசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சேவையில் உள்ள மாணவ ஆசிரியர்கள், இவ்வறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பிக்கலாகாது.

2. கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் 1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக, " நிரந்தரக் காரியதரிசி (பாடசாலைகள் நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கொழும்பு" என்ற விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்கமேல் மூலையில் சிங்கள/தமிழ்/ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம் பெற்ற உதவி ஆசிரியர் பதவிகள் " எனக் குறிப்பிடப்படவேண்டும்.

3. **தேவைப்படும் தகைமைகள்**

பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாக ஒவ்வொரு விண்ணப்பதாரியும் திருப்திகரமாக நிரூபிக்க வேண்டும் :—

(i) 1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாமலும் 18 வயதுக்குக் குறையாமலும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ii) சிங்கள/தமிழ்/ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரம்.
அல்லது
ஆங்கில உதவி ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) சிறந்த நல்லொழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் (மூலப் பிரதிகளல்ல) **பிரதிகளை** இணைத்தனுப்ப வேண்டும்:—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பெற்றுள்ள ஆசிரிய தராதரப் பத்திரம்.

(இ) இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (இவற்றுள் ஒன்று விண்ணப்பதாரி வசிக்கும் பிரிவுக் காரியாதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதாய் இருக்க வேண்டும்).

5. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவிகள் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவாகவும் நிரந்தரமானவையாகவும் இருக்கும்.

(ii) நியமிக்கப்படுபவர் பாடசாலை ஆசிரியர் இளைப்பாற்றுச் சம்பள விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். நியமிக்கப்படும் ஆண்கள் ஆசிரியர் கைம்பெண், அனாதை இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கும் கட்டணம் செலுத்த வேண்டும்.

(iii) நியமிக்கப்படுபவர் ஏற்கனவே அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியில் இல்லாதிருப்பின் 3 வருட காலத்துக்குத் தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவர். அரசினரின் கீழ் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிப்பவர் நியமிக்கப்படுமிடத்து அவர் 1 வருட காலத்துக்கு பதில் பதவியாளராக நியமிக்கப்படுவர்.

(iv) தெரிவு செய்யப்படுபவர் தீவின் எப்பகுதியிலும் கடமையாற்றுதற்கு ஆயத்தமாய் இருப்பதுடன் அதற்கான உடற்றகுதி உடையவராயும் இருக்க வேண்டும்.

(v) தெரிவு செய்யப்படுபவர், அரசினரால் ஏற்கனவே ஆக்கப்பட்ட விதிகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை, குறிப்பாக 1956 ஆம் ஆண்டின் 33 ம் இலக்க அரசினர் கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தற் பொருட்டு இனிமேல் ஆக்கப்படும் விதிகளுக்கும் அமைய ஒழுகவேண்டும்.

6. அரசினர் சேவையில் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவர்கள் கடமைபுரியும் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும்.

7. விண்ணப்பங்களும் விண்ணப்பங்கள் தொடர்பான எக்கடிதங்களும் நிரந்தரக் காரியதரிசிக்கே அனுப்பப்பட வேண்டும்—இவ் அமைச்சின் எவ்வுத்தியோகத்தரின் பெயருக்கும் இவை அனுப்பப்படலாகாது.

8. இச்செய்திமடலின் I ம் பகுதி, II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையும் அரசினர் சேவையில் உள்ள பதவிகளுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளையும் விண்ணப்பதாரிகள் கவனிக்க வேண்டும்.

9. விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பங்கள் தபாலில் இடப்பட்டபின் ஏற்படக்கூடிய தாமதத்தைத் தவிர்க்குமுகமாக விண்ணப்பங்களை நேரகாலத்துடன் அனுப்புமாறு விண்ணப்பதாரிகளுக்கு ஆலோசனை கூறப்படுகிறது.

சி. ஜே. சேரசிங்க,
பதில் நிரந்தரக் காரியதரிசியும் மகா வித்தியாதிபதியும்.

தொடர்பெண் : பா. நி. 12/307.
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி.

**(மாதிரி விண்ணப்பப் படிவம்)**

**உதவி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப்பெயர் : ————.
2. விலாசம் : ————.
3. பால் : ————.
4. விவாகம் செய்தவரா, செய்யாதவரா : ————.
   விவாகம் செய்தவராயின் கணவன்/மனேவி அரசாங்க உத்தி யோகத்தரா ? : ————.
   (விபரம் தருக)
5. பிறந்த திகதி : ————.
6. பின்வருவோர் பிறந்த இடம் : ————.
   (அ) விண்ணப்பதாரி : ————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் : —.
7. (அ) சாதியம் : ————.
   (ஆ) இலங்கையராயின் வம்சாவழியாகவா பதிவு காரணமாகவா: ————.
8. கல்வித் தகைமைகள் : ————.
9. சிங்களத்தில் பெற்றுள்ள தகைமைகள் : ————.
10. தொழிற் தராதரங்கள் ஏதும் இருப்பின் : ————.
11. முன்னேய உத்தியோகம் : ————.
    (i) ஆசிரியராயின்,
    (அ) பதிவு இலக்கம் : ————.
    (ஆ) சேவை விபரம் : ————.

| பாடசாலேப்பெயர் | இருந்து | வரை | வகித்த பதவி |
|---|---|---|---|
| ———— | ———— | ———— | ————. |

    (ii) வேறு அரசினர் உத்தியோகமாயின் :—

| வகித்த பதவி | இருந்து | வரை. |
|---|---|---|
| ———— | ———— | ————. |

12. ஆசிரியராக/அரசாங்க உத்தியோகத்தராக சேவையை முடித்தல்/நிறுத்தல்/விலகுதல்/விடுவித்தல் ஆகியவற்றிற்கான காரணம், (முழு விபரங்களும் தருக).

மேலே கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவை யும் என நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். மேலும், நான் அரசினர் சேவையிலிருந்து நீக்கப்படவில்லே அல்லது பதவியை விட்டு நீங்கியதாக என்மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லே என்றும் நான் வம்சாவழியினுல்/பதிவினுல் இலங்கையரெனவும், இத்தீவின் எப்பகுதி யிலும் கடமையாற்றத் தயாராக இருக்கிறேனெனவும் உறுதிப் படுத்து கிறேன். இத்துடன் இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவையென நான் தெரிவு செய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்காணப்படின் எவ் வித நஷ்ட ஈடுமின்றி நான் விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

1030—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## சமூக சேவைப் பகுதி

**வேலேத்தல மனேஜர் பதவி—அங்கவீனர் பயிற்சி நிலேயம், அம்பிட்டி**

சமூக சேவைப் பகுதியில், அம்பிட்டி, அங்கவீனர் பயிற்சி நிலேயத்தில் வேலேத்தல மனேஜர் பதவிக்கு விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. இந்த அறிவித்தலுடன் இணேக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில், கண்டிப்பாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், 1969 ம் ஆண்டு யூலே மாதம் 24 ந் திகதிக்குப் பிந்தாமல், சமூக சேவை அதிகாரி, பாலதக்ஷ மாவத்தை, காலி முகப்பு, கொழும்பு 3, என்ற விலாசத்திற்கு அனுப்பப்படலவேண்டும்.

2. **இப்பதவிக்கு வகுக்கப்பட்ட சம்பள விகிதம்.**—வருடம் ரூபா 3,420 4 × 120—8 × 180—ரூபா 5,340 (ரூபா 4,080 அல்லது ரூபா 4,800 முன் திறமைகாண் தடை).

3. **நியமன நிபந்தனேகள்.**—இப்பதவி நிரந்தரமானது. ஆனுல் பென்ஷன் வசதி இல்லாதது. தெரிந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், அரசாங்க சேவைச் சகாய நிதிக்குப் பணங்கட்டுதல்வேண்டும்.

4. **கல்வித் தகைமைகளும் ஏனேய தகைமைகளும்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,

(அ) 1969 ம் ஆண்டு யூலே மாதம் 24 ந் திகதியில் 25 வயதிற்குக் குறையாதவர் என்றும் 45 வயதிற்கு மேற்படாதவரென்றும் அத்தாட்சிப்படுத்தப் பிறப்புச்சாட்சிப் பத்திரம் வழங்குதல் வேண்டும்.

**குறிப்பு :** இவ்விலாகாவைச் சேர்ந்த ஊழியர்கட்கு இந்தவயதுக் கட்டுப்பாடு இல்லே.

(ஆ) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில், அல்லது பொதுக்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் (சாதாரணப்/பரீட்சை) சிங்களம்/ தமிழ், எண்கணிதம்/பீச கணிதம் ஆகிய பாடங்கள் உட்பட 6 பாடங்களில் ஆகக்கூடியது 2 தடவையில் எழுதிச் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

(i) கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பரீட்சைப் பத்தி ரம் (இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி) (தொழில் நுட்பம்—மின்சார இயல்) அல்லது,

(ii) அம்பாறை ஹாடி தொழில் நிலேயத்தால் வழங்கப்பட்ட டிப்புளோமா பத்திரம். அல்லது,

(iii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட பொறியியல் என்ஜினியர் வகுப்பு (பின்னேர)ப் பத்திரம்.

(iv) அதற்கு இணேயான வகுப்புப் பத்திரம், அத்துடன்,

(இ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில், தொழில்நுட்ப முறையில் 5 வருட வேலே அனுபவம்,

**குறிப்பு :** கட்டிடக் கலேயில் சாதனே அனுபவம்பெற்ற விண்ணப்ப தாரர்கட்கு முதலிடம் கொடுக்கப்படும்.

(ஈ) நற்குணம் உடையவராயும் தேக ஆரோக்கியம் உடையவராயும் விண்ணப்பதாரர் இருத்தல்வேண்டும்.

5. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தாமல் இந்த இலாகாவிற்கு வந்துசேருதல்வேண்டும். குறிக்கப்பட்ட திகதிக்குப் பிந்தினுல், விண் ணப்பங்களே அனுப்பும் இலாகா அதிகாரிகள் பிந்தினமைக்கு ஏற்ற காரணத்தைக் குறித்து அப்பினுல் ஒழிய ஏற்றுக்கொளப்படமாட்டா.

6. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளேமட்டும் (மூலப் பிரதிகள் தவிர்த்து) இணேத்து அனுப்புதல்வேண்டும்.

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானத்திற்கு அல்லது வித்தியா ரம்பத்திற்கு எடுக்கப்பட்ட பத்திரம் செல்லுபடியாகாது).

(ஆ) படிப்புக் கல்வி, தொழிற்கல்வி, மற்றும் மேலே 4-ம் பந்தியில் குறிக்கப்பட்ட துறைகட்குரிய கல்வித் தகைமைகளே அத்தாட்சிப் படுத்தும் பத்திரங்கள்.

(இ) விண்ணப்பதாரரின் நற்குணத்தையும், இப்பதவிக்கு நியமனம் பெற ஏற்ற தகைமையையும் ருசுப்படுத்தும் புதிய இரு நற் சாட்சிப் பத்திரங்கள். (அரசாங்க சேவையில் இருந்து அனுப்பும் விண்ணப்பதாரர் இவ்வித நற்சாட்சிப்பத்திரங்களே அனுப்ப வேண்டியதில்லே.)

7. இப்பதவிக்கான விண்ணப்பங்களும், அதுபற்றிய வேறேதும் கடிதத் தொடர்புகளும், சமூக சேவை அதிகாரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். தவிர, அவைகளே, இந்த இலாகாவில் உள்ள எந்த உத்தி யோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்பக்கூடாது.

8. **இந்த வர்த்தமானப் பத்திரிகையின் I ம் பகுதி (II) ம்தொகுதி யில் பிரசுரிக்கப்பட்டிருக்கும், அரசாங்க சேவைப் பகுதி நியமனங்கட்கு பொருந்தும் பொது நிபந்தனேகளேப் பார்க்கவும்.**

ஆர். எஸ். திருச்செல்வம்,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
த. பெ. இல. 577,
பாலதக்ஷ மாவத்தை,
காலி முகப்பு,
கொழும்பு 3.
1969 ம் ஆண்டு ஜூன் மீ 20 ந் உ.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம்**

**வேலேத்தல மனேஜர் பதவி—அங்கவீனர் பயிற்சி நிலேயம், அம்பிட்டி**

1. முழுப்பெயர் : ————.
   (கொட்டை எழுத்தில்)
   (அ) குடும்பப் பெயர் : ————.
   (ஆ) ஏனேய பெயர்கள் : ————.
2. தபால் விலாசம் : ————.
3. (அ) 1969 ம் ஆண்டு யூலே மாதம் 24 ந் திகதியில் சரியான வயது : வருடம் : ————. மாதம் : ————. நாள்:———
   (ஆ) பிறப்புத் திகதி : ————.
   (பிறப்புச்சாட்சிப் பத்திரம் இணேக்கப்பட்டிருத்தல்வேண்டும்)

4. (அ) சாதி : ———.
(ஆ) இலங்கைப் பிரசையா என எழுதவும் : ———.
(i) பிறப்பால் : ———.
(ii) பதிவால் : ———.
5. விவாகஞ் செய்தனீரா ? பிரமச்சாரியா ? ———.
6. (அ) கல்வித் தகைமைகள் : ———.
(i) சிங்களம் : ———.
(ii) தமிழ் : ———.
(iii) ஆங்கிலம் : ———.
(ஆ) தொழிற் கல்வித் தகைமைகள் : ———.
(இ) விசேஷ தகைமைகள் ஏதும் இருப்பின் : ———.
(பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படல்வேண்டும்)

7. பின்வரும் பாஷைகளில் எழுத வாசிக்கத் தெரியுமா ?
8. பாடசாலை விட்டதிலிருந்து நீர் பார்த்த உத்தியோகத்தின் விபரம் :———.
9. உங்கள் திறமையையும், நற்குணத்தையும் அறிவதற்கு இரு பிரமுகர்களின் பெயர்களையும் விலாசத்தையும் தருக : ———.
10. நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற இரு பிரமுகர்களின் பெயர்களைத் தருக : ———.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ———.

6-1057—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

இல. : A 44/× 2107/69

## கல்வி,கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : கல்வி ஆலோசகர், கைப்பணி

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள கல்வி ஆலோசகர், கைப்பணி பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும் :

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.7.11
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.7.18.

**குறிப்புகள் :**

(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும் ; மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அனுப்பும்பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தன் கீழ் நியமனம் பெறுதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர்களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரி, விதவைகள், அனாதைகள் உபகாரச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். பெண் ஒருவர் நியமிக்கப்படுமிடத்து அரசாங்க சேவைச் சகாய நிதி நலன்களுக்கு அவர் உரித்துடையவராவார். தனது சம்பளத்தில் 5%த்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். பெண் உத்தியோகத்தர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்ய முன் எந்நேரத்திலேனும் அவர் சேமலாப நிதிக்குத் தொடர்ந்து கட்டணம் செலுத்தவா அல்லது உபகாரச் சம்பளத் திட்டத்துக்கு மாற்றப்படவா விரும்புகிறாரென அறிவிக்க வேண்டும். பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பள விதிகளின் கீழ் அல்லது சேமலாப நலன்களைக் கொண்ட ஒரு பதவியில் அல்லது இவ்விரண்டின் கீழும் ஏற்கனவே அவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்திருப்பின், நியமிக்கப்படும் 6 மாத காலத்துக்குள் தனது விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) நியமதாரி, முதற்கண் 3 வருட காலத்துக்கு தகுதிகாண் முறையில் நியமிக்கப்படுவார். ஏற்கனவே நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான ஒரு பதவியை வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின் அவருடைய நியமனம் முதற்கண் பதில் நியமனமாக அமையும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு : ரூ. 5,520—8 × 360, 2 × 480—ரூ. 9,360 வருடாந்தம். வருடாந்தச் சம்பளம் ரூ. 7,320 க்கு முன் வினைத்திறமைகாண் தடை ஒன்றுண்டு.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—விண்ணப்பதாரி ஒவ்வொருவரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(ஆ) 1969 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதியன்று 30 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகருக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(இ) (i) பரிசோதகர் தரத்தில் 7 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்ற கைப்பணிப் பரிசோதகராய் இருக்க வேண்டும் ; அல்லது

(ii) கைத்தொழில் கலையில் அல்லது நிர்வாகத்தில் அல்லது இவ்விரண்டிலும் 5 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் ஒரு பட்டம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(iii) படிப்பித்தலிலும் நிர்வாகத்திலும் அல்லது இவ்விரண்டிலும் கைத்தொழில் கலைத்துறையில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் பெற்றிருப்பதுடன் கைத்தொழில் கலையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தகுதித் தேர்வுப்பத்திரத்தில் அல்லது தொழிற்றுறைப் பயிற்றப்பட்ட தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) அவர் தமது உத்தியோகக் கடமைகளைப் புரிய இருக்கும் மொழி மூலம் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில்/கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது சமமான யாதேனும் ஒரு பரீட்சையில் இலக்கியத்தில் அல்லது மொழியில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. : ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச் சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும்.

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான்றிதழ்கள்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு :**

(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது ;
(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களேயும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளேயும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை ("அ" எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969.6.19.

6–1157—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## யாழ்ப்பாண மாவட்டத்தில் உடுப்பிட்டிப் பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் வடமராட்சிப் பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

உடுப்பிட்டிப் பிறப்பு, இறப்பு பதிவுப் பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள், **அல்லது** பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தைந்து வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித்தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், கூட்டுறவுதாபன நிலையங்களிலும், பொலிஸ் ஸ்தாபனம் சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் இந்தப் பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1969 ம் ஆண்டு ஆடி மாதம் 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

ம. சா. இராஜசிங்கம்,
மாவட்டப் பதிவாளருக்காக.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
யாழ்ப்பாணம், 1969 ம் ஆண்டு ஆனி மீ 13 ந் உ.

6–977—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### அரசினர் பாடசாலைகளில் வரைதல் ஆசிரியர் பதவிகள்

மேற்குறித்த விடயம் சம்பந்தமாக 22.5.69 ஆந் திகதிய 14,855 ஆம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் I ம் பகுதி II ம் பிரிவில் வெளியிடப்பட்ட விளம்பரத்துக்கு கவனம் கோரப்படுகிறது.

2. மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 31.8.69 வரை இத்தால் நீடிக்கப்படுகிறது. விண்ணப்பங்களே ஏற்கனவே அனுப்பிய அபேட்சகர்கள் திரும்பவும் விண்ணப்பிக்கலாகாது.

3. 22.5.69 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

4. 31.8.69 இன் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

சி. ஜே. சேரசிங்க,
பதில் நிரந்தரக் காரியதரிசியும்,
மகா வித்தியாதிபதியும்.

இல. பா. நி/12/296,
பாடசாலைகள் நிர்வாக கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
19 ஜூன், 1969

6–1140—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## நிருவாகக் கல்விக்கழகம்

### வெற்றுப் பதவிகள்—கற்பிக்கும் பதவியினரும் ஆராய்ச்சிப் பதவியினரும்

13.3.1969 இன் இல. 14,858 கொண்ட அரசாங்க வர்த்தமானியின் பாகம் I, பிரிவு II இல் காணப்படும் அறிவித்தலைப் பார்க்க.

அதில் கொடுக்கப்பட்டுள்ள " சேவை நிபந்தனைகளும் " " விண்ணப்பங்களும் " பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளன :—

**சேவை நிபந்தனைகள்**

தேர்ந்தெடுக்கப்படும் ப்ரீசார்த்திகள் வெளிநாட்டில் பயிற்சி பெற்ற பின்னர் ஆறு ஆண்டுக் காலத்துக்கு நிருவாகக் கல்விக் கழகத்தில் சேவை செய்வாரென ஒரு உடன்படிக்கைக்குக் கைச்சாத்திடல் வேண்டும். அவர்கள் இப்பொழுது பெறும் சம்பளத்துடன் படியாக ஆண்டுக்கு 2,400 ரூபா பெறுவர்.

**விண்ணப்பங்கள்**

இத்துடன் ஒரு மாதிரி விண்ணப்பப் படிவம் இணைக்கப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் வழக்கமான முறையில் நிருவாகக் கல்விப் பணிப்பாளரை 15.7.1969 ஆந் தேதியன்றோ அதற்கு முன்னரோ சென்றடையத் தக்க அனுப்பப்படல் வேண்டும்.

எச். எஸ். வனசிங்க,
நிருவாகப் பயிற்சிப் பணிப்பாளரும்
நிருவாகக் கல்விக் கழகப் பணிப்பாளரும்,
திறைசேரிச் செயளாருக்காக.

6–1073—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

## தேசிய வீடமைப்புத் திணைக்களம்

### (அமய) ஆங்கிலச் சுருக்கெழுத்தாளருக்கு வெற்றிடம்

தேசிய வீடமைப்புத் திணைக்களத்தில் மேலே கூறப்பட்ட பதவிக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. விண்ணப்பங்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில், தகைமைகள், அனுபவம் முதலியவை தரப்பட்டு நிரப்பப்பட்டதுடன், தேசிய வீடமைப்பு ஆணையாளர், த. பெ. இல. 544, கொழும்பு 2 என விலாசமிடப்பட்டு, 1969 ம் ஆண்டு யூலை மாதம் 15 ந் தேதியில் அல்லது அதற்கு முன்னராக அவரை வந்தடையுமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இந்த அலுவலகத்தினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டா. கடிதத்தின் இடது பக்க மேலுறையில் " ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர் பதவிக்கு விண்ணப்பம் " எனக் குறிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தின் மாதிரிப் படிவம் ஆங்கில விளம்பரத்தின் கீழே தரப்பட்டுள்ளது.

3. **சேவை நிபந்தனைகள்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முழுமையாக அமய அடிப்படையில் நியமிக்கப்படுவார். வேறு ஏதாவது நிறுவனத்தின் கீழோ அல்லது அரசாங்கத்தின் கீழோ, நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ வருவதற்கு, இந்த நியமனத்துக்கு விசேட கோரிக்கை எதுவும் இருக்கமாட்டாது. ஒரு நிரந்தரமான நியமனம் செய்யப்பட்டபொழுதும் அல்லது அவனுடைய/அவளுடைய சேவைகள் அவசியமில்லாதபொழுதும், அவனுடைய/அவளுடைய சேவைகள் முடிவடையும். தொடர்ச்சியாகத் திரும்ப வேலையிற் சேருவதற்கு பொதுத் திறைசேரி, " எக்ஸ் " பகுதியில் பதிவு செய்வதற்கு அவனுக்கு/அவளுக்கு ஒரு கோரிக்கையும் கிடையாது.

4. **சம்பளம்.**—ஒரு நாள் வேலை செய்வதற்குச் சம்பளம் ரூபா 3.50 ஆகும். வாழ்க்கைச் செலவுப்படியும், விசேட வாழ்க்கைப்படியும், வேறு படிகளும் அரசாங்க அடிப்படைகளிற் கொடுக்கப்படும்.

5. **தகைமைகள்.**—(i) குறைந்தது கல்வித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையினது அல்லது கல்வித் திணைக்களத்தினது கனிஷ்ட பாடசாலை சான்றிதழ் (ஆங்கிலம்) பரீட்சையிற் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். மேலதிக தகைமைகளுள்ள பரீட்சார்த்திகள் தாம் சித்தியடைந்த பாடங்களைக் குறிப்பிட்டும், அத்துடன் அப்பாடங்களுக்கெதிராக சித்தியெய்திய தரத்தை உ–ம். : விசேட சித்தி, திறமைச் சித்தி எனவும் குறிப்பிடவேண்டும்.

(ii) சுருக்கெழுத்தில் ஒரு நிமிடத்துக்கு 80 சொற்கள் எடுக்கக்கூடிய வேகமும், ஒரு நிமிடத்துக்கு 7 சொற்கள் எழுதக்கூடிய திறமையும் இருத்தல் வேண்டும்.

(iii) தட்டெழுத்துப் பயிற்சியில் ஒரு நிமிடத்துக்கு 30 சொற்கள் பொறிக்கக்கூடிய வேகம் இருத்தல் வேண்டும்.

தேசிய வீடமைப்பு ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம், கொழும்பு—2,
1969 ம் ஆண்டு யூன் மீ 18 ந உ.

6–1054—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மொறட்டுவை, கட்டுபெத்தையிலுள்ள இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்த்தல்

### தொழில் நுட்பவியல் டிப்ளோமாப் பயிற்சி நெறி

1968 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர (உயர்தர) பத்திரப் பரீட்சையில் :

பௌதிகம்,
இரசாயனம்,
தூய கணிதம்,
பிரயோக கணிதம்

ஆகிய நான்கு பாடங்களிலும் சித்தி எய்தியவர்களிடமிருந்தோ, அல்லது

மேற்படி பரீட்சையில் மேற்கூறிய பாடங்களில் ஏதேனும் மூன்றில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுச் சித்தி எய்தியவர்களிடமிருந்தோ,

தொழில் நுட்பவியல் பயிற்சி நெறிக்கு 1969–70 ம் ஆண்டில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள், இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. இப் பயிற்சி நெறிக்கு இரு பாலாரும், 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதியன்று வயது பதினேழு அல்லது அதற்கு மேற்பட்டிருப்பின் அனுமதிக்கப்படுவர்.

3. விண்ணப்பங்கள் கல்லூரியால் விதித்த படியான பத்திரங்களில் அனுப்பப்பட வேண்டும். இப்பத்திரங்களை மேற்படி கல்லூரிப் பதிவாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினமாகிய 1969 ம் ஆண்டு யூலை மாதம் 20 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ அவை மேற்படி பதிவாளரிடம் வந்து சேருதல் வேண்டும்.

4. இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிதி உதவியுடன் இயங்குகிறது. சிவில், பொறிமுறை, மின்சார எந்திரவியல்களும், இலெக்ரோனிக்ஸ், தொலைச் செய்திப் போக்கு வரவு முறைகளிலும் தொழில் நுட்பவியலாளருக்கான பயிற்சி நெறிகள் நடைபெறும். இப்பயிற்சி நெறிகள் ஐந்து வருட வகுப்பாக அமைவதுடன், பொறித் தொகுதிப் பயிற்சியில் அல்லது உரிய துறையில், தேசிய கைத்தொழில்களில் அல்லது அரசாங்க ஸ்தாபனங்களில் 12 மாதங்களுக்குக் குறையாமல் வேலைப் பயிற்சியும் கொண்டதாக அமையும். இங்ஙனம் பெற்றுக் கொள்ளப்படும் செய்கை முறைப் பயிற்சிக்கு, இவர்கள் தொழில் கோரும் நேரத்தில், மதிப்புக் கொடுபடும். முழுப் பயிற்சி நெறியையும் வெற்றிகரமாக பூர்த்தி செய்வோருக்குத் தொழில் நுட்பவியல் டிப்ளோமாப் பத்திரம் வழங்கப்படும் ; இப்பத்திரம் எந்திரவியற் பட்டத்துக்குச் சமனாகக் கருதப்படும்.

5. 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆரம்பமாகும் பயிற்சி நெறியைப் பொறுத்த வரையில், சிவில், பொறிமுறை, மின்சார இலெக்ரோனிக்ஸ், எந்திரவியல்களுக்கும், தொலைச் செய்திப் போக்கு வரவுப் பிரிவுக்கும் முறையே 30,30,30, 15 மாணவர்களுக்கு இடமுண்டு.

எல். எச். சுமணதாச,
அதிபர்.

இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரி,
கட்டுபெத்தை, மொறட்டுவை.

6–1026—27.6.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,860.

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இராணுவத் தலைமை நிலையம்

கீழ்க்காணுபவைகளை விநியோகஞ்செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன:—

(அ) கொழும்பு, தியத்தலாவை, திரிகோணமலை, பனகொடை, அம்பாறை, கட்டுக்குருந்தை, கந்தளாய், உடவளவை, பதவிய ஆகிய இடங்களில் உள்ள படைவீடுகள், வைத்தியசாலைகளினது துணிகளும், படைவீரர்களினது உடைகளைச் சலவை செய்வதற்கும்.

(ஆ) தியத்தலாவையில் உள்ள இராணுவத்திற்கு மலகூட சேவைகள் செய்ய தொழிலாளரை விநியோகிப்பதற்கும்.

இக்கேள்விகள் 1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ம் திகதியிலிருந்து 1970 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரைக்கானவையாகும். இக் கேள்விகள் கொழும்பு, பாலதக்ச மாவத்தையிலுள்ள இராணுவத் தலைமை நிலையத்தின் கேள்விச் சபைத்தலைவரால் 1969 ம் ஆண்டு ஜுலை மாதம் 15 ந் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

திருப்பிக் கொடுக்கப்படும் கட்டுப்பணம் ரூபா 75 (காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) மேற்கூறப்பட்டுள்ள ஒவ்வொரு சேவைக்கும் இராணுவத் தலைமை நிலையத்து சிவில் பரிபாலன அதிகாரியும் கணக்காளரும் என்ற இடத்தில் கட்டவேண்டும். 1969 ம் ஆண்டு ஜுலை மாதம் 14 ஆம் திகதி பகல் 12 மணி வரை கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். மேலும் எல்லா விபரங்கட்கு கொழும்பு, பாலதக்ச மாவத்தையில் உள்ள இராணுவத்தில் வினவவும்.

டி. எஸ். ஆட்டிகல,
மேஜர் ஜெனரல்,
இராணுவத்தளபதி.

இராணுவத் தலைமை நிலையம்,
தபால் பெட்டி இலக்கம் 553,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ.

6–1055—27.6.69 ந் திகதிய வர்த்தமனி இல.14,860

## கச்சேரி, மன்னார்

கீழ்க் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரால் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதி முற்பகல் 11.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) மடுக்கோயிலில் தற்போதிருக்கும் அரசினர் சுற்று விடுதிக்கு மேலதிக அறைகள் அமைத்தலும், திருத்தவேலையும்.

(2) கச்சேரிக் கன்ரீனுக்கு மேலதிக அறைகள் அமைத்தல்.

(3) மன்னார், அரசினர் வாடிவீட்டைத் திருத்தஞ் செய்தல்.

(4) அரிப்பு, அரசினர் சுற்றுவிடுதியைப் பெருப்பித்தல்.

2. கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை, பதிவு செய்யப்பட்ட அரசாங்க கொந்தராத்துக்காரர்களுக்கு விநியோகிக்கப்படும். ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விக் கட்டணமாக ரூபா 25 எக்கச்சேரியிலேனும் செலுத்திப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததின் பின்னரே கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

3. மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய வெற்றுப்பத்திரத்தின் இணைப்பிரதியில் கேள்விப்பத்திரங்கள் அனுப்புதல் வேண்டும்.

4. 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதி முற்பகல் 11.35 மணிக்கு இக்கச்சேரியில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்போது கேள்விக்காரர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

5. ஒவ்வொரு வேலைக்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் வேலையின் பெயர் எழுதப்பட்டு சீல வைக்கப்பட்டுப் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது இக்கச்சேரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. தகுதியான கேள்விக்காரர் உடனடியாக வேலையைத் தொடங்க ஆயத்தமாயிருக்க வேண்டும்.

7. மேலும் தேவையான விபரங்களைக் கந்தோர் நேரங்களில் இக்கச்சேரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

கச்சேரி, மன்னார்,
1969 ம் ஞூ ஜூன் மீ 17 ந உ.

6–987—27.6.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## மன்னார் மாவட்டம்—கிணற்று வேலைகள்

கீழ்க்காணும் வேலைகளுக்காகிய கேள்விப்பத்திரங்கள் மன்னார் அரசாங்க அதிபரினால் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 12 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மன்னார்க் கச்சேரியில் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வட்டுப்பித்தமடு—
 8 அடி விட்டமும், 40 அடி ஆழமுமுள்ள கிணறு வெட்டிக் கட்டுதல்.

2. பரப்புக்கடந்தான்—
 8 அடி விட்டமும், 30 அடி ஆழமுமுள்ள கிணறு வெட்டிக் கட்டுதல்

3. முருங்கன்—
 8 அடி விட்டமும், 60 அடி ஆழமுமுள்ள கிணறு வெட்டிக் கட்டுதல்.

4. காடிக்குளி—
 8 அடி விட்டமும், 60 அடி ஆழமுமுள்ள கிணறு வெட்டிக் கட்டுதல்

5. பூநொச்சிக்குளம் (பெரியபுள்ளிச்சி பொற்கேணி)—
 8 அடி விட்டமும், 60 அடி ஆழமுமுள்ள கிணறு வெட்டிக் கட்டுதல்

1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 10 ந திகதிவரை மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திர இணைப்பிரதியில் கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படவேண்டும். இதைப்பற்றிய மேலதிக தகவல்கள் மன்னார் அரசாங்க அதிபரிடமிருந்து அறிந்து கொள்ளலாம். அரசாங்க திணைக்களங்களுடன் பதிவு செய்த கொந்தராத்துக்காரர்களும், அனுமதிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் மாத்திரம் கேள்விப்பத்திரங்கள் அனுப்பத் தகுதிவாய்ந்தன.

ஒவ்வொரு வேலைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்ப விரும்புவோர் மன்னார்க் கச்சேரியில் ரூபா 25 வீதம் கட்டிப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைக் காண்பித்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற சங்கங்கள் கட்டுப்பணம் கட்ட வேண்டியதில்லை.

ச. கதிர்காமநாதன்,
அரசாங்க அதிபர்,
மன்னார் மாவட்டம்.

மன்னார்க் கச்சேரி,
1969 ம் ஞூ ஜூன் மீ 18 ந உ.

6–1069—27.6.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,860

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கொழும்பு உப பிரிவு

கீழே சொல்லப்பட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 5, ஜாவத்த வீதியிலுள்ள மேற்பிரிவு பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 15 ந தேதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வேலைக்கும் நேராக உள்ள தொகைக்கோ அல்லது அதற்கு மேற்பட்ட தொகைக்கோ நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கூட்டுறவுச் சங்கங்களும், கிராம அபிவிருத்திச் சங்கங்களுமே இவ்வேலைகளுக்குக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை ரூ. ச. | கேள்விக் கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| (1) பறுவைத் திட்டத்தில் நாவின்னை ஓடைக்குக் குறுக்கே சிறுவெள்ளப் பாதுகாப்புக் கட்டு அமைத்தல் .. | 38,000 0 .. | 50 0 |
| (2) பட்டிவில சிறுவெள்ளப் பாதுகாப்புத் திட்டத்திற்குச் சீர்திருத்தம் செய்தல் | 31,000 0 .. | 50 0 |

3. இக்கேள்விகளுக்காகிய வெற்றுப் பத்திரங்களை கொழும்பு, களுத்துறை, கம்பஹா, இரத்தினபுரி ஆகிய உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 12 ந திகதிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விக்காரர்களாக முன்வருவோரைக் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தகுதியுடையவர்களா அல்லவா என்று ஆராய்ந்தறியும் பொருட்டு நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குத் தங்கள் பதிவுப் புத்தகத்துடன், தாங்கள் தற்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளையும் அவைகளின் பெறுமதிகளையும் ஓர் பத்திர மூலம் கேள்விக்காரர்களாக் முன்வருவோர் வெற்றுப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் வெளிப்படுத்தல் வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் பெறுமுன் 1969 ம் ஆண்டு ஜூலை மாதம் 12 ந தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அலுவலக நேரத்தில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தை நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்திற் கட்டவேண்டும் அல்லது ஒரு கச்சேரியில் கட்டிய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. மேற்படி வேலைகளைப் பற்றிய படங்களையும் வேறு தேவையான விபரங்களையும் அலுவலக நேரங்களில் கொழும்பு உப பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஐ. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கொழும்பு உப பிரிவு.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
ஜாவத்த வீதி,
கொழும்பு 5.

6–1056—27.6.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,860

## சுகாதாரத் திணைக்களம்—தேசிய பால் திட்டம்

### பசும்பால் விநியோகம்

**கேள்விக்குத் தகுதியான ஆட்களும் சேவைகளும்.**—1969 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் 1970 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30 ந் திகதி (இரு நாட்களும் உட்பட) முடிய உள்ள காலம் வரைக்கும் கீழ்க்காணும் அட்டவணையில் 1 ம் பந்தியில் சொல்லப்பட்டிருக்கும் வண்ணம் புகையிரத நிலையங்களிலிருந்து/சுகாதார அலுவலகத்திலிருந்து பால் ஊட்டும் நிலையங்கட்கு பசும்பால் விநியோகிப்பதற்குரியதும், வெவ்வேறு முத்திரைகள் பொறிக்கப்பட்டதுமான கேள்விகளை இலங்கையர் அல்லது இலங்கையர் தொழில் நிலையங்களிடமிருந்து அனுராதபுரம் பிரிவு சுகாதார சேவை அத்தியட்சகர் ஏற்றுக்கொள்வார்.

2. (i) **கேள்விக் கட்டுப்பணம்.**—ரூபா 100 பெறுமானமுள்ள வைப்புப் பணத்தை எந்த ஒரு கச்சேரியிலாவது எனது பெயரில் கட்டிப் பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

